# TAMIL LANGUAGE

# PRIMARY ONE

# (2025)

**நோக்கு** : ஆர்வமூட்டும் முறையில் தமிழ்மொழியைக் கற்பித்தல்

**செயல்** : பலதரப்பட்ட கற்பித்தல் முறைமைகளைக் கொண்டு தமிழ்மொழியை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கத் தூண்டுதல்

## அறிமுகம்

உங்கள் பிள்ளை தமிழ்மொழியை ஆர்வத்தோடு விரும்பிக் கற்றுப் பிறரோடு தயக்கமின்றிச் சரளமாகத் தமிழில் பேசத் தேவையான மொழியாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், அவர் தமிழில் தயக்கமின்றித் தம் கருத்துகளைப் பிறருடன் பரிமாறிக்கொள்ளும் திறனையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் உங்கள் பிள்ளைகளால் பொருத்தமான கற்றல் சூழலில் அதிக ஈடுபாட்டுடன் மொழியைத் திறன்பட பயன்படுத்தவும் இருவழித்தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

## பாடத்திட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

1. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்

(i) மொழித்திறன்கள்

(ii) கருத்துப்பரிமாற்றத்திறன்கள்

(iii) விழுமியங்கள் (values)

- ஆர்வமூட்டும் கற்பித்தல் முறைகள்
- தேவைக்கேற்ற நெகிழ்வுத்தன்மைமிக்க பாடத்திட்டம் (flexible syllabus)
- மகிழ்வூட்டக்கூடிய நடவடிக்கைகள்

2. பண்பாட்டுக் கூறுகளை மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு, நாட்டு உருவாக்கத்திற்குத் தேவையான பண்பு நலன்களையும் பெறச் செய்தல்

- மொழியைக் கற்பிக்கும்போது பண்பாட்டுக்கூறுகளையும் இணைத்தே கற்பிக்கின்றோம்.
- மாணவர்கள் நல்ல விழுமியங்களைக் கற்று நாட்டுக்கும் வீட்டுக்கும் ஏற்ற பிள்ளைகளாக வலம் வர விழுமியம் கொண்ட பாடங்களை விடுமுறையில் பெற்றோருடன் இணைந்து செயல்பட உருவாக்கித் தருகிறோம்.
- இதன்மூலம் பெற்றோர்களும் பிள்ளைகளின் ஈடுபாட்டையும் செயல்பாட்டுத் திறனையும் அறிந்து தெளிவு பெறலாம்.

பகுதி 1: நீ குறைந்தது மூன்று செயல்களைச் செய்யவும். நீ எவ்வாறு உன் குடும்பத்தின் மீது அக்கறை காட்டுவாய் என்பதை சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

| | அக்கறை காட்டுதல் | என்னால் எப்போது செய்ய முடியும்**?** எத்தனை முறை**?** | என்னால் செய்ய முடிந்ததா**?** |
|---|---|---|---|
| 1. | நான் என் ______________ காலை வணக்கம் சொல்வேன். | | |
| 2. | எனக்கு உதவி செய்ததற்கு நான் ___________ நன்றி சொல்வேன். | | |
| 3. | எனக்கு உதவி தேவைப்படும் போது, நான் 'தயவு செய்து' என்ற தொடரைப் பயன்படுத்துவேன். | | |
| 4. | | | |

**சூச்சின் தொடக்கப்பள்ளியின் பாடத்திட்டம்**

- இன்பத்தமிழ் பாடநூல்

  1A - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன.

  1B - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன.

- இன்பத்தமிழ் பயிற்சிநூல்

  1A - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன.

  1B - மொத்தம் 13 பாடங்கள் உள்ளன.

- 1A / 1B இன்பத்தமிழ் கையெழுத்துப் பயிற்சிநூல்
- 1A / 1B - சொற்பட்டியல் (தொகுப்பு)
- பட அட்டைகள்
- மின்னட்டைகள்
- பெரிய புத்தகங்கள்
- சிறுவர் கதைநூல்கள்
- ஒலிக்கோல்
- மொழி - பயிற்சித்தாள்கள்
- சொல்வதெழுதுதல் – (சொல்வளப்பட்டியல் )
- SLS இணையத்தளம்
- மொழி விளையாட்டுப் பலகைகளும் அட்டைகளும்

**பள்ளிச் சார்ந்த நடவடிக்கைகள்**

- மௌன வாசிப்பு - Uninterrupted Sustained Silent Reading (USSR)
- சூச்சினில் வாசிப்பை நேசிப்போம் - வாரந்தோறும் வாசிக்கும் நேரம்
- இலக்குகளை நோக்கிய வாசிப்பு – விலங்கு கதைகள்
- மின்னியல் புத்தகம் வாசித்தல்
- கதை நேரம் (கைப்பாவை / முகமூடிக்கொண்டு கூறும் கதைகள்)
- தமிழ்மொழி இருவார நடவடிக்கைகளில் மொழியின் மீதும் பண்பாட்டின் மீதும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்
- மொழி விளையாட்டு
- பாரம்பரிய விளையாட்டுக்கள்

- பண்பாட்டைத் தழுவிய நடவடிக்கைகள்
- தன்னம்பிக்கையோடு மொழியைப் பேசப் பயிற்சியளித்தல்
- வகுப்பு நிலையில் போட்டிகள் வைத்து மாணவர்களை ஈடுபடச் செய்தல்
- புத்தகத் திருவிழா
- பெற்றோர் பிள்ளை வாசிப்புச் சவால் (Family Reading Challenge)

## <u>தமிழ் எழுத்துகளின் அறிமுகம்</u>

முதல் ஆண்டு இறுதிக்குள் மாணவர்களுக்கு 18 மெய் எழுத்துகளும் அ, ஆ, இ, ஈ, உ ஆகிய 5 உயிரெழுத்துகளும் அவற்றைக்கொண்டு உருவாகும் உயிர்மெய் எழுத்துகளும் கற்பிக்கப்படும். இரண்டாம் ஆண்டு ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய ஏனைய 7 உயிரெழுத்துகளும் கற்பிக்கப்படும்.

| தொடக்கநிலை 1 | தொடக்கநிலை 2 |
|---|---|
| ட்,ட,டா,ப்,ப,பா,ம்,ம,மா | ‘ஊ’ உயிரெழுத்து |
| ர்,ர,ரா,ச்,ச,சா,க்,க,கா | ஊகார உயிர்மெய் எழுத்துகள் |
| ந்,ந,நா,த்,த,தா,வ்,வ,வா | ‘எ’ உயிரெழுத்து |
| அ,ஆ உயிரெழுத்துகள் | எகர உயிர்மெய் எழுத்துகள் |
| ன்,ன,னா,ண்,ண,ணா | ‘ஏ’ உயிரெழுத்து |
| ல்,ல,லா,ள்,ள,ளா,ழ்,ழ,ழா | ஏகார உயிர்மெய் எழுத்துகள் |
| ய்,ய,யா,ங்,ங,ஙா,ஞ்,ஞ,ஞா,ற்,ற,றா | ‘ஐ’ உயிரெழுத்து |
| ‘இ’ உயிரெழுத்து | ஐகார உயிர்மெய் எழுத்துகள் |
| இகர உயிர்மெய் எழுத்துகள் | ‘ஒ’ உயிரெழுத்து |
| ‘ஈ’ உயிரெழுத்து | ஒகர உயிர்மெய் எழுத்துகள் |
| ஈகார உயிர்மெய் எழுத்துகள் | ‘ஓ’ உயிரெழுத்து |
| ‘உ’ உயிரெழுத்து | ஓகார உயிர்மெய் எழுத்துகள் |
| உகர உயிர்மெய் எழுத்துகள் | ‘ஔ’ உயிரெழுத்து |
| | ஔகார உயிர்மெய் எழுத்துகள் |
| | |

# <u>மொழித்திறன்</u>

## <u>கேட்டல் / நோக்கல்</u>

- குறிப்பிட்ட தகவல்களைக் கேட்டறிந்தும் பார்த்தும் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.
- பொதுவான தகவல்களைக் கேட்டு அல்லது பார்த்துப் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.

**<u>எடுத்துக்காட்டு</u>** :-

சிறிய கதை அல்லது நிகழ்ச்சியைக் கவனமாகக் கேட்டும் பார்த்தும் கேட்கப்படும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்

**<u>பகுதி 1</u>**

<u>கேள்வி</u>

ட (ப) ம

இவ்வெழுத்துகளில் **ப** என்ற எழுத்தை வட்டமிடுங்கள்.

**<u>பகுதி 2</u>**

**<u>கேள்வி</u>**
ராமு தரையில் படுத்துக்கொண்டு தொலைக்காட்சி பார்க்கிறான்.

சரியான படத்தின் எண்ணை அடைப்புக்குறியினுள் எழுது.

மாணவர்கள் சரியான படத்தை அடையாளமிடவேண்டும்.

**<u>பேசுதல்</u>**

- பொருத்தமான குரல் ஏற்ற இறக்கத்துடனும் சரியான உச்சரிப்புடனும் கேட்பவரின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் பேசுவர்.
- கருத்துகளைத் தெளிவாகவும் தொடர்புபடுத்தியும் சரளமாகப் பேசுவர்.

**<u>எடுத்துக்காட்டு</u>** :-

குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை விளக்கும் தனிப்படத்தைப் பார்த்துத் தாம் புரிந்துகொண்டவற்றைப் பேசுதல்

**உத்தி முறை**

மாணவர்கள் படங்களைப் பார்த்துப் பேசும் போது படத்தில் பார்ப்பதைப் பற்றிக் கூற வேண்டும். பின்பு அந்தப் படத்தில் நிகழும் நிகழ்வைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கூறலாம். அதன் பின் அந்த நிகழ்வு நிகழும் காரணங்களை விவரிக்கலாம்.

இதற்கு மாணவர்களைப் பயிற்சி செய்ய நாங்கள் See Think Wonder உத்தியைக் கையாளுகிறோம். பெற்றோர்களாகிய நீங்களும் பிள்ளைகளுக்கு ஒரு படத்தைப் பார்க்கும் போது நினைவில் கொள்ள வேண்டியவற்றை எடுத்துக் கூறலாம்.

என்ன பார்க்கிறீர்கள்?

என்ன நினைக்கிறீர்கள்?

ஏன் வியப்புக்கொள்கிறீர்கள்?

மாணவர்களை ஆழமாகச் சிந்திக்கவும் ஆக்கக்கரமான கருத்துகளை வழங்கவும் நீங்கள் வீட்டிலும் இதுபோன்ற பயிற்சிகளை வழங்கலாம்.

## <u>பேச்சு வழிக் கருத்துப்பரிமாற்றம்</u>

படத்தோடு தொடர்புடைய உரையாடலில் ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் செய்வர்.

மாணவர்களுக்குப் படத்தைப் பார்ப்பதைப் போல் படிக்கவும் கற்றுத் தர வேண்டும். அப்போதுதான் அவர்களால் சரளமாகப் பேச முடியும்.

## <u>அகன்ற வாசிப்பு</u>

- எழுத்துகளைச் சரியாக அடையாளம் காண்பர்.
- சொற்களை / சொற்றொடர்களை / வாக்கியங்களை எழுத்துக்கூட்டிச் சரியான உச்சரிப்போடு வாய்விட்டுப் படிப்பர்.
- எளிய சொற்றொடர்களையும் வாக்கியங்களையும் படித்துத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்.

**<u>உத்தி முறை</u>**

வாசிப்பு ஒவ்வொரு நாளும் நிகழ வேண்டும். மாணவர்களுக்குச் சொற்றொடர்களாகவும் சொற்களாகவும் கொடுத்து தினமும் வாசிக்கப் பழகவேண்டும்.

(எ.கா) உயரமான மரம், அன்பான நண்பன்

வாசிப்பதை ஒலிப்பதிவு செய்தும் கேட்கச் சொல்லலாம்.

கண்ணாடி முன் நின்று வாசிக்கச் சொல்லாம்.


குடும்ப உறுப்பினர்கள் முன் நின்று வாசிக்க ஊக்குவிக்கலாம்.

## <u>எழுதுதல்</u>

**<u>கையெழுத்து</u>**

- எழுத்துகளையும் சொற்களையும் சொற்றொடர்களையும் பார்த்துத் தெளிவாகவும் வடிவம் சிதையாமலும் எழுதுவர்.

**<u>எடுத்துக்காட்டு</u>** :-




- படித்த சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுத்துக்கூட்டி எழுதுவர்.

**<u>சொல்வதெழுதுதல் பட்டியல் – தவணை 1</u>**

**<u>எடுத்துக்காட்டு</u>** :-

| **வாரம் 5** |
|---|
| 1. சட்டம் |
| 2. படம் |
| 3. சரம் |
| 4. மரம் |
| 5. பட்டம் |

**உடனடி சொல்வதெழுதுதல்**

(எ.கா) அப்பா பட்டம் தந்தார்.

**கொடுக்கப்பட்டுள்ள சொல்வளப்பட்டியல் (1A / 1B)**

- படத்துடன் சொல்லை இணைத்தல்
- படத்தின் பெயரை எழுதுதல்
- கோடிட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை நிரப்புதல்
- சரியான சொல்லை வட்டமிடுதல்
- சொல்லேணி அமைத்தல்
- கொடுக்கப்படும் ஓர் எழுத்தினைக் கொண்டு சொல் உருவாக்குதல்
- கொடுக்கப்படும் பல எழுத்துகளைக் கொண்டு சொல் உருவாக்குதல்
- சொற்றொடர்களை இணைத்தல்
- மாறிக்கிடக்கும் எழுத்துகளைக் கொண்டு சரியான சொல் அமைத்தல்
- சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தை நிறைவு செய்தல்.
- படத்தின் துணைக்கொண்டு கோடிட்ட இடத்தில் சரியான சொல்லை எழுதுதல்
- உயிர் எழுத்துகளை வரிசைப்படுத்தி சொற்கள் அல்லது சொல் உருவாக்குதல்

**ஒரு சில எடுத்துக்காட்டுகள் :-**










## <u>வகுப்பறையில் நிகழும் கற்றல்</u>

மாணவர்கள் எழுத்துக்களை அடையாளம் கண்டு வாசிப்பதோடு, கலந்துரையாடலிலும் ஈடுபடுவது அவசியம்.

- கேள்வி கேட்டல்
- கருத்துத்தெரிவிப்பு
- சுய மதிப்பீடு / சக மாணவர் மதிப்பீடு / ஆசிரியர் மதிப்பீடு / பெற்றோர் மதிப்பீடு
- பயிற்சித்தாள்கள்
- பயிற்சிநூல்
- பொருள் காட்டிப் பேசுதல்
- கதாபாத்திரங்களைக்கொண்டு பேசுதல்

## மதிப்பீடு - ஓர் எடுத்துக்காட்டு ;- தொடக்கநிலை 1

**சுய மதிப்பீடு படிவம் – Self Assessment**

பெயர் : ____________________ தேதி: __________________

வகுப்பு : ____________________

### என் படைப்பின்போது நான்...

| நான்...... | நன்று ☺ | முயற்சி தேவை 😐 |
|---|---|---|
| புட்குறியிடு | | |
| தன்னம்பிக்கையுடன் பேசினேன். | | |
| உரக்கமாகவும் தெளிவாகவும் பேசினேன். | | |
| முழுமையான வாக்கியங்களைப் பயன்படுத்தினேன். | | |
| ஒவ்வொரு கதாபாத்திரத்தைப் பற்றியும் பேசினேன். | | |

**மாணவர்களிடத்தில் எதிர்பார்ப்புகள்**

- **சொல்வதெழுதுதல்**
  சொல்வதெழுதுதல் பட்டியல் (தவணை 1 முதல் 4 வரை) கொடுக்கப்படும் சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுத்துக்கூட்டி எழுதவேண்டும்.

- **வாசிப்பு**

  சொல்வளப்பட்டியல் (தவணை 1 முதல் 4 வரை) கொடுக்கப்படும் சொற்களையும் தொடர்களையும் பிழையின்றி எழுத்துக்கூட்டி வாசிக்க வேண்டும்.

- மொழிப்பயிற்சி
- வீட்டுப்பாடம் – நாட்குறிப்பிலும் பயிற்சித்தாளிலும் ஒப்படைக்கும் நாள் குறிக்கப்படும்.
- கொடுக்கப்படும் பயிற்சிகளைப் பிழையின்றிச் செய்ய வேண்டும்.
- வீட்டுப்பாடத்தைச் சரியான நேரத்தில் முடிப்பது அவசியம்.
- பாடத்திருப்பம் - மாணவரைச் சோதிக்கும் வண்ணம் பயிற்சித்தாள்கள் கொடுக்கப்படும்.

## கற்றல் வளங்கள்

- **கல்வியில் பெற்றோர் பங்கு**
  http://parents-in-education.moe.gov.sg/
  கல்வியமைச்சின் இணையத்தளமான இந்தத் தளத்தில் பெற்றோர் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவுவதற்குப் பயன்படும் தகவல்களும் வளங்களும் உள்ளன.

- **தமிழ்மொழிக் கற்றல் வளர்ச்சிக் குழு**
  http://tamil.org.sg/
  பள்ளிக்கு அப்பாலும் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்பதற்காகச் சமூக அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை இந்தத் தளத்தில் காணலாம்.

- **தமிழ் வாசிப்புக் குழு**
  http://www.nlb.gov.sg/golibrary/
  மாணவர்கள் பரந்துபட்ட அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக நூலகம் எண்ணிலடங்கா புத்தகங்களை இரவல் பெறவும் தரவிறக்கம் செய்து படிக்கவும் இந்தத் தளத்தை உருவாக்கியுள்ளது. நாங்கள் இந்தத் தளத்தைப் பயன்படுத்தி பயன்பெற ஊக்குவிக்கிறோம்.

- மாணவர் கற்றல் தளம்
  https://vle.learning.moe.edu.sg/login

- மாணவர் முரசு புதிர்
  https://www.tamilmurasu.com.sg/

**பெற்றோரிடம் எங்கள் அன்பு வேண்டுகோள்.**

பிள்ளைகளின் உருவாக்கத்தில் ஆசிரியர்களாகிய எங்களுடன் பெற்றோராகிய நீங்கள் இணைந்து பயணிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்தக் கையேடு உங்களுக்கு தொடக்கநிலை1 பற்றிய விரிவான கண்ணோட்டத்தைத் தரும். அதே நேரத்தில் பிள்ளைகளின் முன்னேற்றத்தில் நீங்கள் எங்களுக்கு முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

***முற்றும்***